*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.158/2020***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-2)***

*Name / Father's Name:* ***திருமதி.லதா க/பெ. இளங்கோவன்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **14.05.2024.**
துவக்க நேரம் 11.33

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது வாழப்பாடியில் குடியிருந்து, பெரியகிருஷ்ணாபுரம் அரசுப்பள்ளியில் தலைமையாசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.11.2019 ம் தேதி நான் பாச்சாடு அரசுப்பள்ளியில் தலைமையாசிரியராக பணிபுரிந்து வந்தேன். அன்றைய தினம் மதியம் 03.30 மணியளவில் நான், எனது பள்ளியில் வேலை செய்யும் ராமசாமியுடன் இருசக்கர வாகனத்தில் பேருந்து நிறுத்தத்திற்கு சென்றுகொண்டிருந்தேன்.

2) அப்போது நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மற்றொரு இருசக்கர வாகனம் மோதிவிட்டது. விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியவில்லை. எனக்கு கையிலும், காலிலும் லேசான காயம் ஏற்பட்டது. விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபரை நான் பார்க்கவில்லை. போலிசார், என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) நடந்த விபத்து குறித்து நான் புகாரினை தரவில்லை என்றும், விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரிதான். நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல, தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன்.

2) விபத்தானது புகார்தாரர் ராமசாமியின் கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என்றால் எனக்கு அது தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார், என்னிடம் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை.

முடிவு நேரம் 11.39

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.